# விளம்பரம்
VLAMBARAM™

416-282-8059 · 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை · மாதமிருமுறை · இலவசம்

நதி 13 · MAY 15, 2003 · பாலம் 10



வீடு விற்க,வாங்க...

**Raja M. Mahendran, P. Eng.**
(Vice president/Sales Rep.)



HOMELIFE HIGHER STANDARDS

எமது நிறுவனத்தில் தொழில் புரிய வீட்டு, வியாபார பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

**Direct: 416.315-9397**
**OFFICE: 416.321-6969**


## "கடன் செய்து கொடுப்பதே"

கடன் கொடுப்பவர் (Leudu) விண்ணப்பதாரியின் கடன் தராதர அறிக்கையை (Credit rating Report) பரிசீலிப்பதன் மூலம் பலவிடயங்ளை அறிந்து கொள்ள முடியும். கடன் கொடுப்பதா இல்லையா என்பதை பெருமளவில் இது தீர்மானிக்கிறது. பரிசீலிப்பதன் போது பின்வரும் தகவல்கள் வெளியாகும்.

*விண்ணப்பதாரி நிரந்தர வதிவுரிமை பெற்றவரா இல்லையா என்பது - Social Insurance Number

* வயது------ பிறந்ததிகதி.

*கடன்வரலாறு எவ்வளவுகாலமாகப் பதிவாக உள்ளதென்பது - புதிய / பழைய கடன்

* அடிக்கடி இடமாறும் தன்மையுள்ளவரா அல்லது நீண்டகாலம் ஓரிடத்தில் தரித்திருப்பவரா, Address History - அடிக்கடி முகவரி மாற்றுபவர், நிரந்தர தன்மையற்ற வர் அ!ல்லது கடன் கொடுத்தவர்களிடம் இருந்து தப்புவதற்காகவும் இருக்கலாம் என சந்தேகிக்க வைக்கும்.

* அடிக்கடி வேலை மாறுபவர் ஓரிடத்தில் அல்லது ஓரேதுறையில் நிலைத்துநிற்கும் மனப்பாங்கு அற்றவர், Incomepetent அல்லது Tronbe maker போன்ற சந்தேகங்களை எழுப்பும்----- Employment History

* அடிக்கடி கடன் தேடும் தன்மை உள்ளவரா- மற்றயவர்களின் விசாரணைகள் (Inquiries) மூலம் தெரியவரும். மேலும் அந்நிறுவனங்கள் நிராகரித்த காரணத்தி னால் தான் தம்மிடம் வந்துள்ளார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும்.

*ஒழுங்காக நுகர்வுக் கட்டணங்களைச் செலுத்துபவரா?------ Utility Payments, Phone, Electricity, Cable போன்றவை.

*பகிரங்கப் பதிவுகளிலிருந்து கடன் விசாரணைகள், நீதியற்ற முடிவுகள், மிகுந் திருக்கும் கடன்தொகைக்ள் போன்றவற்றி லிருந்து பெறப்படும் தராதர இலக்கம்-Beacon Score இந்த Beacon Score 650 க்கு கூடுதலாக இருத்தல் நன்று.

* கடன் தவணைப் பணத்தினை குறிப்பிட்ட தவணைக்கு தவறாமல் செலுத்துபவரா? அல்லது தாமதித்து செலுத்துபவரா? (தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## அருள்விருந்து

* மனபரிபாகத்துக்கு ஏற்றவாறு மக்கள் பிறர்க்கு நன்மை செய்கின்றனர். பிறர்க்கு நன்மை செய்யாதவர்க்கு ஆத்ம சாந்தியில்லை.

* உலகப் பற்று உடையவன் மக்களுள் கடையானவன். தெய்வப்பற்று உடையவன் மக்களுள் தலையானவன்.



VICTORIA DAY

## ஆளுமை வளர்ச்சி

மகிழ்ச்சிகரமான இந்த மூன்றாவது பிரதேசத்தில் எனது கனவுகள் தெளிவாகி நனவாகின்றன. எனது பழைய முகத்திற்கு அல்ல, எனது உண்மையான வடிவத்திற்க்கு நான் இப்போ ஆசான். எனதும் மற்றவர்களினதும் தேடலுக்கு, இறைவனுடன் ஒன்றிட ஏங்கும் தேடலுக்கு, நான் ஆசானாக வழிகாட்டுவேன். எனது இதயம் வழிகாட்ட, மற்றவர்களையும் நான் கடந்து வந்த பாலைவனப் பிரதேசங்கள், குகைகள், சதுப்பு நிலங்களுக் கூடாக வழிநடத்திச் செல்வேன். எத்தனை எத்தனையோ இருள் சூழ்ந்த பிரதேசங்களில் ஒளியைத் ஒளித்திருக்கின்றது என்பதை வியப்புடன் உணர்ந்து கொள் கின்றேன். வெளியே ஓடி ஓடி இன்பத்தைத் தேடிய நான், மற்றவர்களுக்கு உதவ விரும்பு வதால், எனக்குள் திரும்பி அன்னையை அறிந்து கொண்டேன். நான் யார் என்பதை இப்போ உண்மையாக உணர்ந்த நான், எனக்கு இறைவன் அளித்திருப்பவற்றை, எனது குறிக்கோளை அடைய உபயோகித்து இயற்கையிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் மேம்பட என்னை முழுமனதுடன் அர்ப்பணிக் கின்றேன்.

அன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையில் ஒரு சந்தர்ப்பம், ஒரு உறவு, ஒரு நிலமை, ஒரு பழக்கம் போன்ற ஏதாவது ஒன்றை மாற்றியமைக்க நீங்கள் சில வேளைகளில் படாத பாடுபட்டுக் கொண்டிருப்பார்கள். "போதும் கடவுகளே! இனி என்னால் இதைத் தாங்க முடியாது என்று, ஒரு விவாகரத்து, குடிபோதை, தற்கொலை முயற்சி என்பவற்றுள் ஏதாவதொன்றில் அகப்பட்டுக் குழம்பிக் கொண்டிருப்பீர்கள். இனிமேல் கவலையை விடுங்கள். நீங்கள் மட்டும் மனது வைத்து முயற்சி செய்தால், உங்களால் நீங்கள் விரும்புவது எதையும் சாதித்து நிச்சயம் வெற்றியடைய முடியும். தொடர்ச்சி 10ஆம் பக்கம்


Since 1987

**வசந்தா நகை மாளிகை**
வசந்தன் - பத்மநாதன்
பத்தர்களின் கைவண்ணத்தில் தங்கத்தின் புதிய வடிவங்கள்!

TEL: 905 848 5151 · OPEN 10:30AM - 8:30PM
FAX: 905 848 8502 · MONDAY CLOSED

3025 HURONTARIO ST., UNIT. 103A, MISSISSAUGA

**Singapore Communication**
UNLIMITED TALKING*
only $40.00 / m
• 350 Mins Daytime Free • Evenings & Weekends Free
$30.00 / M
• 100 Mins Daytime Free • Evenings & Weekends Free
• V/M, C/D*, C/C & C/W FREE • Lunch Hour (12-1pm)
HURRY ALL PROMOTION ENDS THIS MONTH
OFFICE: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17ABC - (Kipling & Steeles)

**துரித பணமாற்றுச் சேவை**
வவுனியா -கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
**416.267.8221**



**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை திறந்திருக்கும். தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
திங்கள் - வியாழன்
காலை 7am - 2pm,
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of Mcnicoll Ave.), Scarboro., ON.




**Insurance & Financial Services**
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life • Disability
• Mutual Fund • Group Insurance • Child Education • Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)

**AERO CANADIAN TOUR & TRAVEL INC.**
"Something Special on Land & Air"
◦ World wide Airline tickets
◦ Canada, U.S.A. Luxury Charted Bus Services
◦ Colombo Airport<=>Home Land Complete Van/Hotel Arrangement
◦ Toronto Airport Pickup / Drop Off
TICO
COLOMBO TORONTO $960
Tel: 416-299-8687 Fax: 416-299-5767
3300 McNicoll Ave. Suite 218, Scarborough, ON M1V 5J6
www.aerocanadiantourandtravel.com

# செய்யும் தொழிலில், வெற்றி பெற



## சூபரின் கதை நமக்குத்தரும் பாடம்:-



"மேலும் வியாபாரத்தை அதிகரிக்க என்ன செய்யலாம் என்று வாடிக்கையாளர்களை எப்போதும் கேளுங்கள்". "சாலையோரத்தில் ஒருவர் உணவகம் வைத்துள்ளார் எனக் கொள்வோம். அதை அந்த உரிமையாளர் வழிப்போக்கர்களுக்கு உணவு பரிமாறும் இடமாக மட்டும் கருதக் கூடாது. அந்த உரிமையாளர் கண்களையும் காதுகளையும் திறந்து வைத்திருந்தால், அந்த இடத்தில் மேலும் பல வியாபார வாய்ப்புக்கள் இருப்பது அவருக்கு தெரிய வரும். வாடிக்கையாளர்களுக்கு சிறுவசதி களைச் செய்து கொடுப்பதுடன், தனது வியாபாரத்தை பெருமளவில் பெருக்கு வதற்கான வாய்ப்பையும் அவர் உருவாக்கிக் கொள்கிறார். இந்த உணவக உரிமை யாளர்,தொலைக்காட்சியை நிறுவி வானிலை பற்றிய செய்திகளை ட்ரக் ஒட்டுநர்களும், மற்றவர்களும் அறிந்து கொள்ள உதவலாம். குடும்பத்தினர் தங்க என தனித்தனி இடங்கள் அமைத்தும், குடும்பத்தினருக்கு தேவையான பொருட்களை: பொம்மைகள், மளிகைப் பொருட்கள், சாலை வரைபடங்கள் முதலி யன----- விற்பதன் மூலமும் தனது வியாபா ரத்தை பெருக்கிக்கொள்ள முடியும்.

சுருக்கமாகச் சொன்னால், எந்த வகையில் வாடிக்கையாளரைத் திருப்தி படுத்தமுடியும்? அதனால் தனது வியாபாரம் எவ்வாறு அதி கரிக்க முடியும்? என்று விற்பனையாளர் சிந்தித்து, செய்தி சேகரித்து, அதன் அடிப் படையில் உடனடியாக அவ்வப் போது செயல்படவேண்டும்.

நாளடைவில் விலை மறக்கப்பட்டு விடும், தரம் மறக்கப்படமாட்டாது என்பது புதுமொழி. எனவே விற்பனையாளர் நல்ல தரமான பொருள்களையே எப்போதும் விற்பனை செய்ய வேண்டும். வியாபாரத்தைப் பற்றிய பொது அறிவையும், தன்னுடைய தொழிலைப் பற்றிய நுணுக்கங் களையும் எப்போதும் கற்றுவரவேண்டும். இதற்கு செய்தித் தாள்களும், பத்திரிகைகளும், வர்த்தக சங்கங்களும் பெரிதும் உதவுகின்றன. கடைசியாக வெற்றி பெற்ற தொழில் முனைவரிடம் என்னென்ன தகுதிகள் பொதுவாக இருந்தன என்று பார்ப்போம்.

**பெரி. முத்துராமன்**

* வெற்றி பெற்றே தீருவேன் என்ற பிடிவாதம்.
*முழு மூச்சாக செய்யும் தொழிலுக்கு தங்கள் நேரத்தையும், சக்தியையும் அர்ப் பணித்தல்.
* தோல்விகள் ஏற்படும்போது, தவறுகளை ஆராய்ந்து மாற்று வழியில் தொடர்ந்து வெற்றிக்கு முயலல்.
*மற்றவர்களுக்கு வெற்றி தந்த காரணங்களைக் கண்டறிந்து ஆரம்ப நாட்களில் அவற்றை அப்படியே பின்பற்றுதல். இங்கு காப்பி அடிப்பதில் பின்பற்றுவதில் தவறு ஏதுமில்லை. சக்கரத்தை ஒருவர் ஏற்கனவே கண்டறிந்து வைத்திருந்தால் அதை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். நாம் மீண்டும் ஒரு முறை சக்கரத்தை கண்டறிய வேண்டும் என்பது இல்லை. ஆரம்ப நாட்களில் வசதிகளும், வாய்ப்புக்களும் குறைவாக இருக்கும் போது, சோதனைகளும் ஆய்வுகளும் செய்ய நம்மிடம் வலுவிருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பங்களில் மற்றவர்களுக்கு வெற்றி தந்த காரணங்களை அப்படியே காப்பியடித்தலே புத்திசாலித்தனமாகும். ஆயினும் சூழ்நிலைகளையும், சந்தர்ப்பங் களையும் ஒப்பிட்டுப் பார்த்து, காப்பியடித்தல் நலம்.

வாடிக்கையாளரைப் போற்றிப் புகழ்ந்து உங்கள் நேரத்தையும், சக்தியையும் செல விட முடியுமா? ஆம் என்றால், அநேகமாக வியாபார வெற்றி வெகுதூரத்தில் இல்லை; இல்லை என்றால் வியாபாரம் தொல்லை தான்.

**வெற்றிக்கான நான்கு வியாபார விதிகள்:-**

1. தரமான பொருளை நியாயமான விலைக்கு விற்கவும்.
2. உங்கள் கவனம் எப்போதும் வாடிக்கை யாளர் மேல் இருக்கட்டும்.
3. மேலும் வியாபாரத்தை அதிகரிக்க என்ன செய்யலாம் என்று வாடிக்கையாளர்களை எப்போதும் கேளுங்கள்.
4. உங்கள் வெற்றிக்கு நீங்கள் தொடர வேண்டியது 'தொடர்கல்வி'

இங்கு தொடர்கல்வி என்பது ஏட்டுப்படிப்பன்று. ஆனால் உங்களைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை ஆர்வமுடன் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப உங்களை மாற்றிக்கொள்ளுவதே.

வெற்றி என்பது ஒரு போதும் முடிவடைவதில்லை. தோல்வி என்பது ஒரு போதும் நிரந்தரமல்ல. பாதிவெற்றி பல சமயங்களில் காலத்தின் கட்டாயம். முழுத் தோல்வி என்பது முற்றிலும் நடக்க இயலாதது. முயன்றால் முடியாதது இல்லை. **முயற்சி திருவினையாக்கும்.**

உங்கள் தொழிலில் நீங்கள் வெற்றி பெற்றவரா? உங்கள் வெற்றி மேலும் பலருக்கு முன் உதாரணமாக அமையலாம். உங்கள் வெற்றிச் செய்தியைக் கேட்க நாங்கள் விரும்புகிறோம். சொல்ல நீங்கள் தயாரா?

அப்படியானால் இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் தொழிலில் உங்கள் நேரத்தையும் பொருளையும் சேமிக்க, இலாபத்தை அதிகரிக்க, ஆலோசனைகளுக்கும், மறு ஆலோசனைகளுக்கும் திரு. பெரி. முத்துராமனுடன் தொடர்பு கொள்ளுங்கள். இவருடைய Success Biz Solution நிறுவனத்தின் வாயிலாக பல தொழில் முனைவர்கள் பயன் அடைந்து வருகிறார்கள். நீங்களும், இன்றே பயன் அடைய இப்போதே 416 430 0623 அல்லது (C) 416 278 2026 இல் தொடர்புகொள்ளுங்கள்.

பெரி. முத்துராமன் MBA, M.Com பட்டம் பெற்றவர். இந்தியாவிலும், கனடாவிலும் சிறுதொழில் வளர்ச்சியோடு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொண்டவர். இவருடைய கட்டுரைகள் இந்தியாவில் Financial Express, Economic Times, Hindu Businesslime மற்றும் ரொறன்ரோவில் வெளிவரும் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.


A-1 Truck & Forklift Training School



* AIR BRAKES
* LOW RATES CONTRACT AVAILABLE
* DEFENSIVE DRIVING
*ONE ON ONE TRAINING
* INSTANT ROAD TEST BOOKING

Contact:
KULDIP GREWAL

905-405-9990

7454 AIRPORT Rd. Mississauga, Ont.

தையல் விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள தொழிலகத்தில் பாவிக்கும் (INDUSTRIAL SEWING MACHINE) JUKI (JAPAN MADE) 2 NEEDLE தையல் இயந்திரம் விற்பனைக்கு உள்ளது. மேலதிக தொடர்புகளிற்கு: 416-750 1573

JOB JOB JOB

ஸ்காபரோ பகுதியில் அமைந்துள்ள GROCERY கடையில் வேலை செய்வதற்கு ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு: 416 267-0408


மணப்பெண் அலங்காரம்
கேக் மேக்கிங்
Bridal Dressing & Cake Making

Modern Cake Decoration

UK Sugar Craft
Wilton U.S.A. Method







| | |
|---|---|
| • Paper Tole | •பேப்பர் ரோல் |
| • Cake Decoration | •கேக் மேக்கிங் |
| • Bead Jewellery | •முத்து நகை மாலை |
| • Hair Styling | •தலை அலங்காரம் |
| • Facial (Herbal) | •பேசியல் |
| • Bridal Dressing | •மணப்பெண் அலங்காரம் |
| • Normal Dressing | •சேலை அலங்கரித்து விடுதல் |
| • Eye Brow Shaping | •கண் புருவ அலங்காரம் |
| • Saree Tassel | •சாறி குஞ்சம் |
| • Saree Pleating | •சாறி மடிப்புக்கள் |

Mathumai S.

*Diploma Holder of Mallika School of Home Science - Sri Lanka*

Tel: 416-424-2528

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**
**435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6**

SPECIAL




Canadian Multicultural Radio (CMR FM 101.3)
501 Passmore Avenue, Unit 35, Toronto, On M1v15G
Tel: 416-292-4059 Fax: 416-292-4574 e: info@cmr24.com
www.cmr24.com

May 8th, 2003

For Immediate Release:

Recently, our office was made aware of some serious misinformation being passed to the general public through Kandiah Sivasothy's (also known as illayabarathi) call-in program between 1 PM and 2 PM, Monday to Friday inclusive, on the Canadian Thamil Broadcasting Corporation (CTBC). On this show, Illayabarathi and some call in people directly and indirectly link CMR as an affiliation of the World Tamil Movement (WTM). An analysis of the shows indicates that there is malicious defamation of the reputation and character of both CMR and its owners.

CMR would like to categorically deny all allegations that connect us with the World Tamil Movement.

CMR urges CTBC and its audience to avoid these malicious statements against CMR. CMR also urges CTBC to discontinue the publication distribution of these defamatory statements. The owners of CMR and CMR are considering directing their legal counsel to initiate legal action with respect to the defamatory nature of the comments referred to.

Canadian Multicultural Radio.

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா
## நிர்வாக சபை 2003 / 2004

கடந்த மே 04, 2003 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் 2003/2004 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் கனடா கந்தசாமி கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர்: | திரு. யோ. தவலிங்கம் | |
| துணைத்தலைவர்: | திருமதி சு. சுப்பிரமணியம் | |
| | திருமதி நா. துரைராஜசிங்கம் | |
| செயலாளர்: | திரு. கே.ரீ.எம் விஜயகுமார் | |
| துணைச்செயலாளர்: | திருமதி நாமகள் சிவகுமார் | |
| பொருளாளர்: | திரு. ஏ. ஜெயராஜா | |
| துணைப்பொருளாளர்: | திரு. வெ. ராஜகுலேந்திரன் | |
| கலை கலாசாரம் - | செயலாளர்: திருமதி ஜெயா பரராஜசிங்கம் | |
| விளையாட்டுத்துறை -செயலாளர்: | திரு. எஸ் புவனேந்திரன் | |
| இளைஞர் விவகார செயலாளர்: | திருமதி கிருஸ்ணவேணி சுந்தர் | |
| நிர்வாக சபைஉறுப்பினர்: | திரு. ம. உமாகரன் | திரு. R. ராஜ்மோகன் |
| | திரு. C. S. சண்முகநாதன் | திரு. எஸ். ராஜநாயகம் |
| | திரு. மா ஜெகன்மோகன் | |
| கணக்காய்வாளர்: | திரு. குகனேந்திரன் | |


# ACTION HONDA

*"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"*




புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன் சோதீஸ்
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



**416-704-1179**

அலுவலக நேரம்
Mon, Fri, Sat: 9 am - 6 pm
Tues, Wed: 12 noon - 9 pm
4334 Kingston Rd, Scarborough




# LARGE INDOOR PUBLIC CAR AUCTION

***EVERY WEDNESDAY EVENING***
***STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM***

**100+ VEHICLES ON DISPLAY INDOORS**

INCLUDE MANY LATE MODEL
> G.M. > FORD
> CHRYSLER > HONDA
> NISSAN > TOYOTA
>V.W., & OTHER FOREIGN
& DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.

**WEEKLY CASH BUYERS DRAWS OPEN**
**MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM**
**FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM**
**1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ONTARIO.**

**CIA PUBLIC AUTO AUCTION & SALES**
**416 - 242 - 5052**
www.cialeasing.com

# அன்புத் தமிழ்



## புலவர் பெருமை

தமிழ் மக்கள் புத்தி மிகுந்தவர்கள்; ஊக்கம் உடையவர்கள்; உழைப்பிலே வல்லவர்கள். தமிழ் இன உணர்வு உள்ளவர்களாகவும் காணப்படுகின்றார்கள். ஆனால், தமிழ் மொழியில் பற்று குறைந்தவர் களாக உள்ளனர். தமிழ் இலக்கிய இலக்கணங் கள் காட்டும் மரபை அறியாதவர்களாக உள்ள னர். குறிப்பாக, புலம் பெயர்ந்த தமிழர்களிற் பெரும்பாலோர் தமிழ் மொழியைப் புறக்கணித்து வருவது கவலையைத் தருகின்றது.

## கவிஞர் வி. கந்தவனம்

இத்தகைய நிலமையிலும் ஒரு சில இளைஞர்கள் கவிதை பாடி வருவதைக் காண மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறன்றது. இவர்களது சக்தியை வளர்க்கும் வகையில் இவர்களது முன்னோர்களின் பெருமை களைச் சிறிது எடுத்துக்காட்டுவது இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

முற்காலத்தில் கவிதை பாடியவர்கள் புலவர்களாக விளங்கினர். புலமை-அறிவு. கல்வி, கேள்விகாளால் புலமை மிகுந்தவர் கள் புலவர்கள். இவர்கள் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்பியவர்கள். நிலையில் திரியாத அடக்கமும் மனத்தின் கண் மாசில்லாத அறமும் உடையவர்கள். அதாவது, அழுக்காறு அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன இல்லாத அறத்திலே நின்று ஒழுகியவர்கள். அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை ஆகிய ஐந்தும் நிறைந்த சான்றோர்களாக விளங்கியவர்கள்.

எல்லாவற்றிலும் மேலாக, எப்பொருளை யார் யார் கூறக் கேட்பினும் அப்பொருளின் மெய்ப் பொருளைக் காண்பதில் வல்லவர்களாகவும் நீதி நியாங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தவர்களாகவும் நீதி வழுவா நெறி முறையில் நின்று ஒழுகும் பெரியோர் களாகவும் புலவர்கள் வாழ்ந்தார்கள்.

இத்தகைய பண்புடையார் சொல்வழி தமிழ் உலகம் செல்வதாயிற்று. அவர்கள் வழி அரசும் செல்லும் என்று பாண்டிய மன்னன் நெடுஞ் செழியனே பாடிய பாடலின் ஒரு பகுதி இது:

ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசு செல்லும். (புறம்-183)

சோழநாட்டு மன்னன் கோப்பெருஞ் சோழன் புலவர்களை மதித்து அரசு நடத்தியவன். பிசிராந்தையார் என்னும் புலவருடன் அகம் நக நட்புப் பூண்டவன். அவன் உயிர் நீத்ததை அறிந்து பிசிராந்தையார் உண்ணாவிரதம் இருந்து தாமும் உயிர் நீத்த கதை புறநானூறு எமக்குக் காட்டும் சோகக் கதை. அரசுக்கு அறிவுடை யோர் உயிராய் இருந்த காலத்துக் கதை.

இவ்விதமே பாரி மன்னனுக்குக் கபிலரும் அதிகமானுக்கு அவ்வையாரும் பெரு நண்பர்களாக விளங்கியமை புலவர் உலகத்துக்குப் பெருமை தரும் வரலாறுகள்.

மூப்புக்கு மருந்தாகிய நெல்லிக் கனியைத் தான் உண்ணாது அவ்வையாருக்குக் கொடுத்து தமிழை வாழ வைத்த அருஞ்சிறப்புடையவன் அதிகமான். நெஞ்சை அள்ளும் செயல் ஒன்றைச் செய்தான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமன்னன். வறுமை வந்தக்கால் மன்னர்களை நாடுவது புலவர் வழக்கம். பெருஞ் சேரலைக் காண நெடுந்தூரம் நடந்து சென்றார் மோசிகீரனார் என்னும் புலவர். மன்னன் முரச விழாக் காண வெளியே சென்றிருந்தான். முரச விழா என்பது வீர முரசத்துக்கு நீராட்டும் சடங்கோடு கூடிய கொண்டாட்டம். மன்னன் வரும்வரை காத்திருக்கக் கருதிய புலவர் களைப்பு மிகுதியால் வெறுமையாக இருந்த முரசு கட்டிலில் ஏறிப் படுத்துக் கொண்டார். இது குற்றமுடைய ஒரு செயல். ஆயின் புலவர் அது முரசு வைக்கும் கட்டில் என்பதனை அறியார். திரும்பி வந்த மன்னன் புலவர் அறியாது செய்த பிழையைப் பொறுத்ததோடன்றி, கட்டிலின் அருகில் நின்று புலவர் நன்கு தூங்கும் வண்ணம் தண்ணெனச் சாமரையும் வீசி நின்றான். கண் விழித்த புலவர் கண்கலங்கப் பாடுகின்றார்:

குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉஞ்சாலுநற் றமிழ்முழுதறிதல்
அதனோடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித்தண்ணென
வீசி யோயே-------------------
------------------------------------------ (புறம்-50)

இவ்விதம் புலவர்களை மன்னர்கள் முற்காலத்தில் மதிப்போடு உபசரித்தனர். மன்னர் அவையிலே சரியாசனம் தந்து பெருமைப் படுத்தினர். 'வெள்ளை அரியாசனத்தில் அரசரோடு என்னைச் சரியாசனம் வைத்த தாய் என்பது காளமேகப் புலவர் பாடல்.


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா




**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555
2095 Weston Road, Suite 203, Toronto, ON
(416) 755-2801
2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON

**INCOME TAX**



*Tarsem Parmar*

- Incorporation
- Business Set-up & Registration
- Accounting & Bookkeeping
- Payroll, G.S.T. & P.S.T.
- Incomes Taxes (Free E-File)
- CCRA Audit and Appeals

**FINANCIAL SERVICES**



- Mortgages
  upto 1.5% below the bank posted rates
- Lines of Credit
- Business Loans
- Personal Loans

**PERMANENT RESIDENT CARDS**

Free Applications filled for Seniors for PR Cards
Special Discounted rates to Taxi/Truck Operators, Serving the community since 1992

Scarborough & Markham Area
416-937-1563
2 Irenemount Cres., Markham
(Markham Rd./Steeles Ave.)

Brampton
416-937-1563
8 Strathearn Ave., Unit 1
(Dixie/Steeles)

EXCEL
Powered by VarTec Telecom

**Get PAID what you're WORTH!**

Would you rather work at home, draw a great INCOME and offer products you believe in? Now you can. Discover what thousands of people know is true. Excel Canada offers you the opportunity to become your own
boss, and live the LIFESTYLE of your choice.

IT'S THE CHANCE TO...

- Offer high-quality products and services
- Do something you believe in
- Live the lifestyle you've always dreamed of!

It's that easy! Call today for more information.
Your SATISFACTION depends on it.

**For More Information Please Contact**
**Thiru Saravanapavan**
Senior Director
National Training Director
**Tel: 416-707-7900**
E-mail:thiru@myexcel.ca
Web. www.excelir.ca/thiru

# "கடன் செய்து கொடுப்பதே"

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தாமதிப் பதென்றால் எவ்வளவு காலம்? என்பதை தரவுப்படுத்தி R1 இலிருந்து R9 வரை குறிப்பிடப்பட்டிருக்கும். R1 மிக ஒழுங்காக பணம் செலுத்துவதையும் R9 மிகத் தாமதமாக செலுத்துவதையும் குறிக்கும். இடைப் பட்டவை எவ்வளவு தாமதமாகத் தவணைப் பணத்தினைச் செலுத்துவர் என்பதையும், தாமதமாகச் செலுத்துவதை ஒரு வழக்க மாகக் கொண்டிருக்கிறரா என்பதையும் தெரியப் படுத்தும்.

* கடன் பதிவுகளிலிருந்து முன்னர் எப்போதாவது அறவிடமுடியாக் கடன் (Written off), Collection, Skip Account முக்கியமாக Bankrupty போன்ற தகவல்கள் வெளியாகும்.

## N. முருகதாஸ்

கடன் அறிக்கையினைக் கவனமாகப் பரிசீலிக்கும் கடன்கொடுப்பவர், கடன் அட்டைகளை ஒருவர் கையாளும் விதத்தைக் கொண்டு (Patterns), அவர் கடன் பெறத்தகுதியானவரா எனத் தீர்மானிப்பார். ஒவ்வொரு நிதி நிறுவனமும் கடன் அறிக்கையை ஆய்வது பற்றி தமக்கென தனியான நியதியைக் கொண்டுள்ளனர். உதாரணமாக ஒரு நிறுவனம் 650 க்கு மேற்பட்ட Bcacon Score ம் R1 தரத்தினை உடையவர்களை முதற்தர வாடிக்கை யாளராக கருத மற்றொரு நிறுவனம் 675 Beacon Score உள்ளவர்களையே முதல் தரமானவராகக் கருதும்.

நாம் முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் கடன் தரம் (Credit rating) குறையக் குறைய, கடன் கொடுப்பவர் வாடிக்கையாளரது Risk Factor அதிகமாவதாகக் கருதி கடனுக்கான வட்டிவீதத்தை அதிகரிப்பார். மேலும் கடன் விண்ணப்பத்தை நிராகரிக்கவும் கூடும்.

மேலதிக விபரங்களுக்கும், உங்கள் Mortgage தேவைகளுக்கும்
N. Murugadas
Mortgage Specialist, Savers Mortgage
416-543-6614 or 416-423-0218


## BUSINESS FOR SALE

PIZZA STORE FOR SALE. ஸ்காபரோவில் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கு PIZZA STORE விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 416-524-7145









"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஓம்

## ஸ்ரீநிவாஸ் நிலையம்








**சகல இந்துமத கிரியைகள்**

- திருமணம்
- பூப்புனித நீராட்டுவிழா
- குடிபுகுதல்
- வியாபாரதோச பரிகாரங்கள்
- சமய சம்பந்தமான மங்கல வைபவங்கள்

சகல இந்துமதக் கிரியைகளும் ஆகம விதிமுறைப்படி செய்வதற்கு

**சர்வன் ஐயர்** (சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள்)
**குகன் ஐயர்** (பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வர சர்மா)
கனேடிய திருமணப் பதிவு அதிகாரி

**சர்வன் ஐயர் -** 416-609-0863, 416-292-0423
416-891-6360
**குகன் ஐயர் -** 416-292-6089



**விசேட வைபவங்களுக்கு (பிராமணாள்) சைவ உணவுகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்**



இரசாயன சேர்க்கை கொண்ட செயற்கை சம்பூக்களை பாவித்து மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

கவலையைவிடுங்கள்

## Vitaplex Shampoo & Conditioner

(சம்போ அன்ட் கன்டிஷனர்)
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.




ரொறன்ரோ
மிசிசாகா
ஸ்காபரோ
நோர்த் யோர்க்
மொன்றியல்
ஒட்டாவா
இலுள்ள
அனைத்து
தமிழ்
வர்த்தக
நிலையங்களிலும்
பெற்றுக்
கொள்ளலாம்




**Special Offer**

உங்கள் அபிமானம் பெற்ற
Vitaplex Sampoo & Conditioner
இன்று முதல் புதிய விலையில்

| | |
|---|---|
| Shampoo | $7.99 |
| Conditioner | $7.99 |
| Shampoo & Conditioner | $14.99 |

(கனடாவில் தயாரிக்கப்படும் சகல வகையான சம்பூக்களும் கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது)

**Raja M. Mahendran,** P. Eng.

Vice President/Sales Rep.

Office - Tel.: (416) 321-6969 Fax: (416) 321-6963

Direct:(416) 315-9397 Fax:(416) 282-4978 Email: raja@mahendran.ca








*நன்றி நவில்கின்றோம்!*


எமது புதிய நிறுவனமான வீடு, விற்க வாங்க, அது சம்பந்தமான ஆலோசனை வழங்கக் கூடிய Home Life GTA Realty Inc. என்ற நிறுவனம் உத்தியோக பூர்வமாகமே 09, 2003 வெள்ளிக் கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்விற்கு நேரடியாக கலந்து கொண்டும், தொலைபேசி மூலம், தொலைநகல் மூலம், மின் அஞ்சல் மூலம் எம்மை வாழ்த்திச் சிறப்பித்த நண்பர்கள், ஆதரவாளர்களிற்கும், எமது இதய பூர்வமான நன்றி.

HomeLife GRA Realty Inc.

1711 McCowan Rd. #206,
Toronto, M1S 3Y3, TP: 416 321 6969, Fax: 416 321 6963

அன்புடன்

ராஜா மகேந்திரன், அமாண்டோ சூ, எடி வூ













'நாமும் நமது இல்லமும்' தொடர்ச்சி
அடுத்த இதழில் தொடரும்


INSURANCE

# காப்புறுதி

INDUSTRIAL ALLIANCE™
INSURANCE AND FINANCIAL SERVICES

RBC Insurance

## உங்கள் காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நம்பிக்கையான நிறுவனம்

நீங்கள் உங்களை ஆயுட் காப்புறுதி செய்வதன் மூலம் உங்கள் அன்புக்குரியவர்கள் எதிர்காலத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவும் தங்கள் உறுதியான வாழ்வைத் தொடரவும் நீங்கள் உதவி செய்கிறீர்கள். ஆயுள் காப்புறுதிகளில் பல வகைகள் உள்ளன. அவை பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

### தவணைக் காப்புறுதி TERM INSURANCE

### நிரந்தர ஆயுட் காப்புறுதி PERMANENT INSURANCE & GUARANTEED PAID UP OPTION WITH CASH VALUE

இந்தத் திட்டத்தின்படி உங்கள் ஆயுட்காலம்வரை திட்டம் நீடிக்கும். கட்டுப்பணம் எக்காலத்திலும் அதிகரிக்காது. இத் திட்டத்தில் நீங்கள் விரும்பியபடி 10, 15 அல்லது 20 வருடங்களில் உங்கள் காப்புறுதிக்கான முழுக் கட்டுப்பணத்தையும் செலுத்தி முடிக்கலாம். அதற்கான உத்தரவாதம் உங்கள் காப்புறுதிப் பத்திரத்தில் எழுத்தில் வழங்கப்படும்.

### வீட்டு அடமானக் காப்புறுதி MORTGAGE INSURANCE

வங்கியின்மூலம் கொடுக்கப்படும் ஈட்டுக் கடனுக்கான காப்புறுதித் திட்டத்திலும் பார்க்க, எங்கள் இலகுவான அடமானக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் உங்கள் விருப்பத்திற்கேற்ப உங்கள் வீட்டு அடமானக் காப்புறுதியை தெரிவு செய்வதால் உள்ள சில நன்மைகள்

* உங்கள் பலன் பெறுபவராக (Beneficiary) உங்களுக்கு விரும்பியவரை நீங்கள் தெரிவு செய்யலாம். (வங்கியின் பெயரைத் தெரிவு செய்ய வேண்டியதில்லை)

* அடமானக் கடனுக்காக வங்கியை மாற்ற நேரிட்டால் காப்புறுதித் திட்டத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை.

* காப்புறுதிக்கான மாதாந்தக் கட்டுப்பணம் எந்தக் கட்டத்திலும் அதிகரிக்காது
* உங்கள் அடமானக் காப்புறுதியை ஆயுள் காப்புறுதியாகவும் மாற்றலாம்.

### வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி NON MEDICAL INSURANCE

40 வயது தொடக்கம் 80 வயது வரையிலானவர்களுக்கு வைத்திய பரிசோதனையின்றி காப்புறுதி செய்யப்படும். பணக் கொடுப்பனவு உறுதி செய்யப்படும். நீரழிவு நோயாளர்களும் இதில் அடங்குவார்கள்.

### சிறுவர் கல்வி சேமிப்புத் திட்டம் R.E.S.P

உங்கள் குழந்தைகளின் எதிர்கால உயர்கல்விக்கான சேமிப்புத் திட்டத்தில் அரசாங்கம் வழங்கும் 20 வீத மானயத்துடன் எமது நிறுவனம் வழங்கும் 15 வீத போனஸ் ஆகியவற்றைப் பெற்று நன்மையடையுங்கள்.


### நோய் வருமுன் காக்கும் காப்புறுதி CRITICAL ILLNESS INSURANCE



**SRITHARAN THURAIRAJAH**
(Associate Life Underwriter)

**Cell: 416 918 9771**
**Tel: 416 297 6932**

OUR GUARANTEES ARE WRITTEN IN YOUR POLICY



# செந்தியின் தமிழன் வழிகாட்டி வழங்கும்

# வர்த்தகச் சோலை

பொது மக்களும் வர்த்தகர்களும் சந்திக்கும் வர்த்தகச் சோலை சங்கமத்தில் நீங்களும் கலந்திட அன்புடன் அழைக்கிறேன். அன்புடன் என்றும் உங்கள் செந்தி

வர்த்தகச் சோலை வெற்றிபெற 'விளம்பரம்' வாழ்த்துகிறது.

## வர்த்தகக் கண்காட்சி

**At Parc Downsview Park**

**(Keele & Sheppard)**

**May 24th Sat 12 pm to 10 pm**

**May 25th Sun 11 am to 9 pm**




உலகத்தமிழோசையின் 34ஆவது இலக்கத்து சாவடிக்கு (Booth) அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- உலகத் தமிழோசை

For Stall Booking & Information Call
Athavan Publications Inc.

**416-615-4646**



உலக சாதனையை நோக்கி முன்னேறும் முத்தையா முரளீதரன்

## விளையாட்டுத் தகவல்கள் - 123 கிரிக்கெட்

இன்று கிரிக்கட் ரெஸ்ட் சரித்திரத்திலும் சரி, ஒரு நாள் சர்வேதேச போட்டி களிலும் சரி உலகிலேயே தலைசிறந்த பந்துவீச்சாளராக கணிக்கப்படுவது தமிழ் இனத்திற்கு பெருமை சேர்க்கும் தமிழ் மகன் முரிளீதரன் என்றால் மிகையாகாது. தற்போது முரளியுடன் போட்டி போடும் ஒரே ஒரு வீரர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷேன் வார்ன் மட்டுமேயாகும். ஆனாலும் ஷேன் 111 ரெஸ்ட் போட்டிகள் எடுத்துள்ளார். ஆனால் முரளீதரன் 80ஆவது ரெஸ்ட் போட்டியிலேயே 450ஆவது விக்கெட்டை எட்டிப் பிடித்துள்ளார். "மம்மி தந்த ஊக்க மாத்திரையை" உட்கொண்டதால் தற்போது கிரிகெட் போட்டிகளில் இருந்து ஒரு வருடத்திற்கு தடை செய்துள்ளார்கள் ஷேன் வார்ன். ஆனால் உண்மையான திறமை மிக்க தமிழ்மகனுடன் போட்டி போடும் ஷேன் வார்னின் 491 விக்கெட்டுகளுக்கும் ஊக்க மாத்திரையா அல்லது அவரது திறமையா காரணம் என்பது கடவுளுக்கே மட்டும் தெரியும் உண்மை!

**வெற்றி தோல்வியின்றி முடிந்தது 2-வது ரெஸ்ட்: முரளீதரனுக்கு 450-வது விக்கெட்**



இலங்கை. நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே கண்டியில் நடைபெற்ற இரண்டாவது மற்றும் இறுதி கிரிக்கட் ரெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

முன்னதாக கொழும்பில் நடைபெற்ற முதல் ரெஸ்டும் முடிவு இல்லாமல் போனதால். 2 ஆட்டங்கள் கொண்ட தொடரும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

30 ஓவர்களில் 191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற ஒரு தின ஆட்ட 'ஸ்ரைல்' இலக்குடன் ஆடத்தொடங்கியது இலங்கை. ஆனால், ஒரு விக்கட்கெட்டை இழந்து 72 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. ஷேன் பாண்ட் பந்தில் ஜெயசூர்யா 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தும் வெற்றி நம்பிக்கையை இலங்கை வீரர்கள் மாற்றிக் கொண்டனர்.

முன்னதாக, ஒரு விக்கெட் இழப்புக்கு 92 ஓட்டங்கள் என்ற முந்தையநாள் எண்ணிக்கையுடன் ஆட்டத்தைத் தொடர்ந்து நியூஸிலாந்து, 183 ஓட்டங்களுக்கு 2-வது இன்னிங்ஸை இழந்தது. 139 ஓட்டங்களுக்கு 7விக்கெட் என்ற மோசமான நிலையில் நியூஸிலாந்து இருந்தபோது ராபி ஹர்ட், பால் வைஸ்மேனும் ஜோடி சேர்ந்தனர். இருவரும் 2 மணி நேரம் களத்தில் நின்று 40 மதிப்புமிக்க ஓட்டங்களைச் சேர்த்தனர்.

8-வது விக்கெட்டுக்கு இந்த ஜோடி சேர்த்த ஓட்டங்கள் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடியக் காரணமாக அமைந்தது.

முரளீதரனின் சிறப்பு: 80-வது ரெஸ்டில் விளையாடும் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி சிறப்புப் பெற்றார்.

3-வது வீரர்: அத்துடன் மொத்தம் 450 விக்கெட்டுகளை வீழ்த்தி, அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 3-வது வீரரானார் முரளீதரன்.

மேற்கிந்தியத் தீவுகளின் கோர்ட்னி வால்ஷ் 519 விக்கெட்டுகளை வீழ்த்தி முதலிடத்திலும், 491 விக்கெட்டுகளை வீழ்த்திய அவுஸ்திரேலியாவின் ஷேன் வார்ன் 2-வது இடத்திலும் உள்ளனர்.

சுருக்கமான புள்ளிவிபரங்கள்:
நியூஸிலாந்து- 111.5 ஓவர்களில் 305 (ரிச்சர்ட்சன் 55, ஸ்டைரிஸ் 32, ஓரம் 74, வெட்டோரி 55, வாஸ் 2-48, முரளீதரன் 3-90) 97.3 ஓவர்களில் 183 (ஃபிளெமிங் 33, ரிச்சர்ட்சன் 55, வைஸ்மேன் 29, வாஸ் 3-31, முரளீதரன் 5-49).

**மூன்றாவது ரெஸ்டையும் வென்றது அவுஸ்திரேலியா**

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரானமூன்றாவது ெ9ஸ்டில் அவுஸ்திரேலியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம், 4 ரெஸ்ட் கொண்ட தொடரை 3-0 என கைப்பற்றி முன்னிலை பெற்றுள்ளது. அத்துடன் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக அவுஸ்திரேலியா தொடர்ந்து பெறும் 9-வது வெற்றி இது. ஆட்டத்தின் கடைசி நாளான திங்கள் கிழமை உணவு இடைவேளைக்குப் பின்னர் ஃபாலோ ஆனில் 284 ஓட்டங்களைச் சேர்த்து மே.இ. தீவுகள் ஆட்டமிழந்தது.

லாரா 42 ஓட்டங்களிலும், சார்வான் 58 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

மெக்கில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றி னார்.

லாசன் ஹாட்ரிக்: 8 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிக எளிதான இலக்குடன் 2-வது இன்னிங்ஸைத் தொடங்கியது அவுஸ்திரேலியா. ஆட்டத்தின் முதல் பந்திலேயே லாங்கர் எல்பிடபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவுஸ்திரேலி யாவுக்கு அது எவ்வித பாதிப்பை ஏற்படுத்தாலும், விக்கெட்டை வீழ்த்திய லாசனுக்கு 'ஹாட்ரிக்' மைல் கல்லாக அமைந்தது. முன்னதாக அவுஸ்திரேலி யாவின் முதல் இன்னிங்ஸின் கடைசி 2 விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தியிருந்தார் லாசன். இதன் மூலம் 'ஹாட்ரிக்' சாதனையைப் பெறும் 4-வது மேற்கிந்தியத் தீவுகள் வீரராகிறார் லாசன். இதற்கு முன்பு, கோர்ட்னி வால்ஷ், லான்ஸ்

**எஸ். கணேஷ்**


கிப்ஸ், வெஸ் ஹால் ஆகிய மே.இ. தீவுகள் வீரர்கள் ஹாட்ரிக் சாதனை படைத்துள்ளனர். ஹேடன், லீமான் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 277 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

**சுருக்கமான ஸ்கோர்: அவுஸ்திரேலியா**-154.3 ஓவர்களில் 605-9 டிக்ளேர் (துடுப்பாட்டம் 113, லீமான் 96, வாஹ் 115, கில்கிறிஸ்ட் 65, பிக்கெல் 71, லாசன் 3-131, பாங்க்ஸ் 3-204). 2.3 ஓவர்களில் 8.1


**மே.இ.தீவுகள்**- 128.5 ஓவர்களில் 328 (கெயில் 71, ஸ்மித் 59, சார்வான் 40, பெஸ்ட் 20 ஆட்டமிழக்காமல் கில்லெஸ்பி 3-31, மெக்கில் 4-107). 284( கெயில் 56, சார்வான் 58, லாரா 42, மெக்கில் 5-75, லீ 2-44).


# NEW PUNJAB TRUCK & FORKLIFT

*Training School*



- LOW RATE
- GET TRUCK LICENSE AT HALF RATE
- FORKLIFT LICENSE $99.00



Air Brakes, Defensive Driving, log book, dangerous Goods, 1 Classroom Training, One to Ont Training, City & Highways.

**Jasbir Singh or Sukhwant singh - Tel:905-564-5393**
**1339 Khalsa Dr. Mississauga**





MAKINA COMPUTERS INC.
www.makinacomputers.com
Microsoft CERTIFIED Systems Engineer Database Administrator
Onsite-service
Home Networking
Computer Rentals
Custom-Programming, Training & Data Services for small businesses
Shree Shan B.Sc (Comp Sc. Hons)
IT Consultant
Phone: 416-857-5305 Fax: 416-267-4794 Pager:416-812-7500
Email: shreeshan@makinacomputers.com



# MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 5.20% on $100,000.00 per month installment comes out $601.11. For different time period closing rates are given below*



*Mortgage Rates (மோட்கேஜ் வட்டி வீதம்)*

| Period | Rate of interest |
|---|---|
| 6 month | 4.55% |
| 1 Year | 3.90% |
| 2 Year | 4.50% |
| 3 Year | 4.65% |
| 4 Year | 4.85% |
| 5 Year | 5.25% |
| 7 Year | 5.90% |
| 10 Year | 6.15% |

Variable Prime rate 0.65% and Prime rate 4.50%
Some conditions may apply



For more information call:
**Anil Joshi at**
**416.888.1072**



வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குபடுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் வீட்டுப் பிரதிநிதி "கேதா"வை நாடுங்கள்.



24 hrs

தொடர்புகளிற்கு: **416.677.4707**

# சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து.



## மறுமணம்?....... நறுமணம்?

ஆயிரம் காலத்து பயிரான திருமணம், மனிதர்கள் இந்த மண்ணில் பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதற்கு வழி வகுக்கின்றது. ஆனால் திருமணம் செய்து கணவன் மனைவியாக வாழ்வது என்பது சிலருக்கு பலவருடங்களாவும், பலருக்கு சில வருடங்களாகவும் அமைந்து விடுகின்றது. திருமணம் செய்து முதல் சில காலங்களுக்கு இனிமையாக இருக்கும் மணவாழ்கையில் காலம் செல்லச் செல்ல இனிமை இருந்த இடம் தெரியாமல் மறைந்து கசப்பு உருவாகி விடுகின்றது. அதிலும் குடும்பம், பிள்ளைகள், பொறுப்புக்கள் என்பன பாரமாகி அவற்றை எவ்வாறு கையாள்வது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். மணவாழ்க்கை என்பது, நாம் தான் வாழ்க்கையை இனிமையாக அமைக்க வேண்டும், அது தானாகவே இனிமையாக அமைந்து விடாது என்பது பலருக்கு தெரியாமல் இருப்பதே மணவாழ்க்கையில் கசப்பு உருவாகக் காரணமாக அமைகின்றது.

இனிப்பாகவோ, கசப்பாகவோ அமைந்து விட்ட மணவாழ்க்கை கணவனின் அல்லது மனைவியின் இறப்பு, விவாகரத்து போன்ற பிரிவுகளால் முடிவுக்கு வருகின்றது. கணவனின் பிரிவை தாங்க முடியாமல், மரணமான கணவனின் சிதையில் விழுந்து தானும் உடன் கட்டை ஏறி உயிரை விட்ட பெண்கள் முதலாக, கணவனை அல்லது மனைவியை கொலை செய்து தமது வாழ்க்கையையும் சீரழித்து விட்ட பலரது கதைகளை நாம் கேட்டிருக்கிறோம்,பார்த்திருக்கின்றோம். ஆனால் கணவன், மனைவிக்கு இடையே எந்த வகையான பிரிவு வந்த போதும் தாம் இந்த மண்ணில் கொண்டு வந்த பிள்ளைச் செல்வங்களுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்து தமது பிள்ளைகளின் வாழ்க்கையே தமது வாழ்க்கை என்று வாழும் எத்தனையோ தாய் தந்தையரையும் இந்த மண்ணில் நாம் இன்றும் காண்கின்றோம்.

தனிமை என்பது மனித இனத்துக்கு ஒரு சாபக்கேடு என்று கூறலாம். தனிமையினால் பாதிக்கப்பட்ட சிலர், இந்த மண்ணில் இன்பமாக வாழ்வதற்கு முக்கியமான அன்பும் கிடைக்காமல் விரக்தி அடைந்து ஏக்கத்தில் தமது வாழ்க்கையும் முடித்துக் கொள்கின்றனர். சிலர் அன்பைத் தேடி பல வழிகளிலும் அலைகின்றனர். மரணத்தினால் அல்லது விவாகரத்தினால் தனிமைப்படுத்தப்பட்ட பலர் காலம் செல்லச் செல்ல தனிமையின் கொடிய பிடிக்குள் அகப்பட்டு விடுகின்றனர். பிள்ளைகளும் வளர்ந்து தமது வாழ்க்கையை பார்க்க போய்விட்டபின், உறவினர்களும் தத்தமது வாழ்க்கையில் கருத்தாக இருப்பதனால் தனிமையில் இருக்கும் தம்மைப்பற்றி யாருமே இந்த உலகில் அக்கறை கொள்ளவில்லையென்று கவலையில் ஆழ்ந்துவிடுகின்றனர். ஒரு சிலர் அந்த தனிமைக்கு ஒரு முடிவு எடுக்க முனைகின்றனர்.

**மறுமணம் :-** தாய் மண்ணில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்த போது, ஒரு கிராமமே குடும்பம் போன்று அன்னியோன்னியமாக ஒருவர் மீது ஒருவர் அக்கறையுடன் வாழ்ந்ததனாலும், கோவில்கள், திருவிழாக்கள், சினிமா, வானொலி போன்ற பொழுதுபோக்குகள், நண்பர்கள், உறவினர்கள் என்று பல வழிகளில் தனிமைக்கு ஒரு வகையில் தடை போடக்கூடியதாக இருந்தது. திருமணம் செய்யாமலும் மறுமணத்தை பற்றி எண்ணியும் பாராமலும் வாழ்ந்தவர்கள் பலர். ஆனால் இந்த மண்ணில் அடுத்த வீட்டில் வாழ்பவர் கூட யார் என்று தெரியாத வாழ்க்கை நிலையில் தனிமையின் பாதிப்பு பல மடங்காகின்றது. மணவாழ்க்கையில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஒரு சிலர் தனிமையைப் போக்க மறுமணம் செய்துகொள்ளவும் முடிவு செய்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு தனிமனிதரது வாழ்க்கைக்கும் அவரவரே பொறுப்பாவர். வாழ்க்கையை எவரும் எவ்வாறும் வாழ்ந்து விட்டுப் போகலாம், அது மற்றவரை பாதிக்காதவரை. மறுமணம் செய்வதுதான் ஒரேவழி என்று முடிவெடுப்பவர்கள் மிகவும் அவதானமாக இருத்தல் அவசியம். அப்படி ஒரு முடிவு எடுத்தால் அதுபற்றி பிள்ளைகளுடனும் நெருங்கியவர்களுடனும் மனம் விட்டு பேசி தவறான ஒரு அபிப்பிராயம் வராதபடி பார்த்துக்கொள்ளல் அவசியம். "உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது" என்பார்கள். நரம்பில்லாத நாக்கால் நாலுவிதமாக மற்றவர்கள் பேச இடம் வைக்க கூடாது. வெறுவாய் சப்புவர்களுக்கு அவல் கிடைத்த கதையாக உங்கள் கதை அவர்கள் வாயில் கண்டபடி கடிபடாதவாறு பார்த்துக்கொள்ளுதல் அவசியம். உங்களுக்கு இடிப்பதாக நினைத்துக் கொண்டு உங்கள் நெருங்கியவர்களிடம் என்ன கலியாணமாம், இந்த வயதில் அதுதான் தேவைபடுகுதாக்கும், வெட்கமில்லையோ என்று வாய்க்கு வந்தபடி உங்களையும் உங்கள் உறவுகளையும் பழிக்க இடம் வைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மறுமணம் செய்யும் எண்ணம், விருப்பம் இருந்தால், உறவுகளுக்கு தெரியுமுன்பு நீங்கள் மறுமணம் முடிக்க இருப்பவருடன் ஜோடி போட்டு உல்லாசமாக ஊர்சுற்ற புறப்படாதீர்கள். மற்றவர்களின் தேவையற்ற கதைகளினால் உங்களது வாழ்க்கையும் உங்களுக்கு வேண்டியவர்களின் வாழ்க்கையும் ஒரு போராட்டமாகி விடும் என்பதை மனதில் கொள்ளுங்கள். திருமண வாழ்க்கையை சமுதாயம் ஏற்றுக் கொள்வதுபோல மறுமண வாழ்க்கையை சமுதாயம் இலகுவில் ஏற்றுக்கொள்ள மாட்டாது. மறுமணம் முடித்து பொது இடங்களிற்கு போகும் போது ஏதோ மிருகக்காட்சி சாலையில் நூதனமான மிருகங்களை பார்ப்பது போல உங்களையும் கண்களால் நூதனமாகப் பார்க்க தீண்டுவார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலையை கற்பனை செய்து பாருங்கள். இவை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கி சமாளிக்க நீங்கள் தயாரா?



மறுமணத்திற்கு நீங்கள் தயார் வாழ்த்துகள்.
சிந்தனை தொடரும்.........


# New Kalyani Catering & Take out

NOW

**292 Markham Road, Scarborough, Ontario**

**416-261-9774**



**நியூ கல்யாணி தனது 9 ஆவது வருடத்தை முன்னிட்டு வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை May 15th, 2003 ஆரம்பிக்கின்றது**

**வாரத்தில் ஏழு நாட்களும்**

**Lunch Special**

| | |
|---|---|
| Madras chicken Buriyani | $3.99 |
| Jaffna Buriyani | $4.99 |

**Dinner Special**

| | |
|---|---|
| Megoring Noodles Chicken *(Malasiyan Style)* | $3.99 |

**வாரத்தில் ஏழு நாட்களும்**

**இடியப்பம் 6¢**

500க்கு மேல் கொள்வனவு செய்தால் 5¢

ரொட்டி (பறோட்டா) 50¢

100க்கு மேல் கொள்வனவு செய்தால் 40¢

**ஒவ்வொரு திங்கள் முதல் - புதன் வரை Lunch Special**

Vegitable Thali $2.99

***Dinner Special***

Singapore Noodles $2.99

**ஒவ்வொரு வியாழன் முதல் - வெள்ளி வரை**

**Lunch Special**

விரதச் சாப்பாடு 10 பதார்த்தங்களும் வழங்கப்படும் $3.99

***Dinner Special***

| | |
|---|---|
| மசாலா தோசை | $2.49 |
| Plan தோசை | $1.99 |
| 5 இட்லி | $1.99 |

(சாம்பார், சட்னி இலவசம்)


**சனிமுதல் - ஞாயிறு வரை**

**Lunch Special**

முத்துச்சம்பா 10 பதார்த்தங்களுடன் வாழையிலையில்

**Dinner Special**

கொத்து ரொட்டி(கோழி, ஆடு, மாடு)



**சனி, ஞாயிறு- தீவக மக்களின் முறைப்படி விஷேசமாக தயாரிக்கப்படும் கூழ் $3.99**

எந்த நேரத்திலும் எவ்வளவு ஆனாலும் ஓடராக செய்து பெற்றுக் கொள்ளலாம். மற்றும் (Ceylon Bakery பாண் வகைகள், Cake வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து சிற்றுண்டி வகைகளும் மலிவு விலையில் செய்து தரப்படும். எந்த விதமான கொண்டாட்டங்களானாலும் மலிவு விலைகளில் Catering செய்து தரப்படும்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



சென்ற இதழ் தொடர்ச்சி...

ஆனால் ஒரு நிபந்தனை! நீங்கள் வெற்றி பெற வேண்டுமானால், புதியது ஒன்றை ஆரம்பிக்க உடன்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் கொஞ்ச நேரம், சில நிமிடங்கள், உங்களைப் பற்றிய உங்கள் தற்போதைய வாழ்க்கையை பற்றிய உண்மையான நிலையை அலசி அறிந்து, அதில் மாற்றியமைக்க வேண்டியவற்றை சிறப்புற மாற்ற உதவும்படி உள்ளார்ந்த பக்தியுடன் இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து வணங்குங்கள். அதற்குப் பின் உங்கள் உணர்வு, சிந்தனை, சொல், செயல் யாவற்றையும் விழிப்புணர்வுடன் அணுகுங் கள். உங்கள் பார்வையை மறைத்த தப்பபிப்ராயங்களை மாற்றியமைக்க உங்கள் தினசரி வந்தனை உதவி உங்களை வெற்றிப்பாதையில் வழிநடத்திச் செல்லும். உங்கள் பக்தியும் சரணாகதியும் உங்கள் வாழ்க்கைச் சந்தர்ப்பங்களில் சக்தி வாய்ந்த நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். உங்கள் வாழ்வில் நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை எதுவாக இருந்தாலும் அதைத்தீர்க்கும் சக்தியையும் திறமையையும் இறைவன் உங்களுக்குத் தந்திருக்கின்றான். எல்லாம் வல்ல ஈஸ்வரன் எமக்களிப்பதை நன்றியுடன் ஏற்றுக்கொள்வது தான் உண்மையான பக்தி. நாம் விரும்புவதை தேடியோடும் முயற்சியில் எமது மனதிலுள்ள அபரீத ஆசைகள் தான் எமக்கும் பேரின்பத்திற்கும் இடையேயுள்ள தடைகள் என்பதை நாம் உணரத் தவறி விடுகின்றோம். எமது ஆழ்மனதில் குற்றங் குறைகளை குணப்படுத்துவதை எம் குறிக்கோளாக்கி, எம்மை நாமே அன்புடன் மதித்து அந்த அன்பை மற்றவர்களுக்கும் பகிர்ந்தளித்தோமானால் நமக்கு வாழ்வில் இன்பம் நிச்சயம். இவை காலத்தால் அழியாத கோட்பாடுகள். ஒவ்வொரு தினமும் ஒரு பிரார்த்தனை என ஆரம்பியுங்கள். பிரார்த்தனைக்கடியில் பழக்கப்பட்டு போன உங்கள் பழைய சிந்தனைகள், நம் பிக்கைகளை, உண ர்வுகளை, இப்படி உங்கள் முன் னேற்றத்தைத் தடுப்பவைகளை, ஓ நான் இவற்றை மாற்ற வேண்டும் என அடையாளங் காணுங்கள். புதிய சிந்தனை புதிய அணுகுமுறையை பக்தியுடன் உபயோகித்து முன்னேறுங்கள். கோபம், குடி போன்ற ஒரு செயல் உங்களை பிரச்சனைக்கு உட்படுத்தினால், அதிலிருந்து வெளியேறச் செய்ய வேண்டிய செயலைக் கைக்கொள்ளுங்கள் ஒவ்வொரு நாளும் இவ்வாறு ஓரடி எடுத்து வைத்து வைத்து முன்னேற உங்கள் வாழ்வு நிச்சயம் வளம் பெறும். உங்களை வேறொருவரால் மாற்ற முடியாது. உங்களால்தான் உங்களை மாற்றியமைக்க முடியும் என்பதை உணர்ந்து செயற்படுங்கள்.

**தை—வாழ்வு**

ஒரு நாளேனும் வயிறு நிரம்பச் சாப்பிட்டிருந்தால் சந்தோஷமாயிருந்த ஒரு நேரத்தை நினைக்க முடியுமானால் மரணத்தின் பிடியிலிருந்து ஒரு தடவை யேனும் தப்பித்திருந்தால், இவற்றுள் ஏதேனும் ஒன்றையோ அல்லது எல்லா வற்றையும் நினைவு படுத்த முடியுமானால், நீ இறைவனுக்கு நிச்சயம் நன்றி சொல்ல வேண்டும்.

**12 தலையங்கங்கள்**

1.வாழ்வு
2.அன்பு
3.விழிப்புணர்வு
4.அங்கீகரித்தல்
5.ஏற்றுக்கொள்ளுதல் 6.மன்னிப்பு
7.புரிந்துணர்வு 8.பக்தி
9. நம்பிக்கை 10.பெறுமதி
11.சேவை 12. அமைதி(இன்பம்)

வாழ்வில் கட்டாயம் முதலாவதாக வரவேண்டியதை முதன்மைப் படுத்தும் போது என் வாழ்வு வளம் பெறும். எம்மைப் படைத்த இறை வனைத் தான் எம் வாழ்வில் நாம் முதன்மைப்படுத்த வேண்டும் என்பது சகல மதங்களாலும் உறுதிப்படுத்தப்பட்ட உலக நியதி. முதலில் இறைவனைத் தேடிக் கண்டறிந்து, அங்கீகரித்து அவர் எமக்குணர்த்துவதைக் கேட்டுப் புரிந்து அவர் வழிகாட்டலை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் இறைவனை நோக்கி ஓரடி எடுத்து வைத்தால் அவர் நிச்சயம் பத்தடி எடுத்து எமை நாடி வந்து ஆசிர்வதிப்பார். உன் சுவாசம் இறைவன். உன் அசைவு இறைவன். எங்கு சென்று என்ன செய்ய வேண்டும் என்ற உனது எண்ணம், இறைவன், உனது சிந்தனையைச் செயற்படுத்துவது இறைவன். உனது சொல் இறைவன், நீ உண்பது இறைவன், ஏனெனில் இறைவன் அருள் இல்லாவிடில், நீ முக்கியமானதெனக் கருதும் ஒன்றும் நடக்கவே நடக்காது. உண்மை


**லலிதா பூருடி**

என்னவென்றால் இறைவன் தான் முதன்மை யானவர். வாழ்வின் இந்த நியதியை நீ அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கட்கும் காலம் வராதபடியால் இறைவன் இல்லை என்று நம்புகிறவர்களும் இருக் கின்றான். ஆனால் நீ காலையில் உனது முதல் சுவாசம் இறைவன், என்பதை மறக்க ாதே. உன்வாழ்வில் இறைவனின் கருவியாக நீ செயற்படுகிறாய். உனக்காகவோ, மற்றவருக்காகவோ செயற்படுமுன், வாழ்வு உனக்களிக்கும் சந்தர்ப்பம், திறமை, ஆற்றல் சகலவற்றிற்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தி, உனது வாழ்க்கைப் பாதையில் நாள் தோறும் நீ நடக்கையில், உன் சிந்தனை, சொல், செயல் யாவற்றையும் வழிநடத்த உதவுமாறு இறைவனை வேண்டிக்கொள். உனது செயல்கள் யாவற்றையும் இறைவன் கண்காணிக்கும் படி வேண்டும்போது உனக்கு வரும் ஆசீர் வாதங்களுக்கு நன்றி செலுத்து. முதன்மை ஸ்தானத்தை இறைவனுக்கு அளித்து நீ வாழும் போது இறைவனுக்கு அளிக்கும் நன்மைகளெல்லாம் உன்னை நிச்சயம் சூழ்ந்து கொள்ளும்.

இன்றுவரை, இறைவனின் சக்தி அன்பு, அருள் யாவற்றையும் தேடியோடி அலைய வேண்டும் என நீ நினைத்திருக்கலாம். ஆனால் இன்று இறைவன் உனக்கருகில் எப்போதும் இருக்கிறான் என்பதை நன்றி யுடன் உணர்ந்து நம்பிக்கயுடன் மகிழ்ந்திரு. இன்று என்வாழ்வில் எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை முதன்மைப் படுத்து கின்றேன்.

மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள்
- 905-624-9617


**பூட்டு? சாவி?**



**KEERTH LOCKSMITH**
**வீடு-வியாபாரம்-தொழிலகம்**
வீட்டுத் திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா?
மற்றும் உங்களது சகலவித திறப்பு சம்பந்தமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய
இலக்கம் (416) 439-3709
Pager: (416) 375-7330



**மொழிபெயர்ப்புச் சேவை**


**தமிழ் - ஆங்கிலம் - சிங்களம்**

* அடையாள அட்டைகள்
* திருமணப்பதிவுப் பத்திரங்கள்
* சாரதி அனுமதிப் பத்திரங்கள்
* கடிதங்கள்
* பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள்
* கல்விச் சான்றிதழ்கள்
* இறப்புச் சான்றிதழ்கள்
* மரண அத்தாட்சிப் பத்திரங்கள்

இன்னும் பல............உங்கள் மொழி பெயர்ப்புச் சேவைகளுக்கு இன்றே நாடுங்கள்
பிரெஞ்சு, ஜேர்மன் மொழிகளில் உள்ள பத்திரங்களும் மொழிபெயர்ப்பிற்காகக் கவனத்திற் கொள்ளப்படும்
தொடர்புகட்கு: 39, Cosentino Dr., Scarborough, Ont, M1P 3A3
T.P 416-335-0622, உலகத்தமிழர் இயக்க சமூக நூலகம், WTM LIBRARY




**pundit prithipal**



astrologer

*Solutions for black magic, evil spirits, drinking problems, family related problems, money problems, love relationships, and much more!*

*Forecasting includes, palm readings, sun sign analysis, name readings, birthday readings, love and health, and money chances*




*CALL TODAY at 905-678-8932!*

Pundit Prithipal
26 Sledman St.
Malton, ON
L4T 1K5


tel: 905-678-8932
fax: 905-612-0906
cell: 416-219-7054
e-mail: pundit@punditprithipal.com
website: www.punditprithipal.com

Free Consultation! Call for help today - "I understand your Problems"



**NTE AUTO**


**New Trade Engineering Inc.**



ஸ்காபரோவில் 12வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

**Also Air Condition Service & Repair**



**SIVABALAN**
416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

**151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON**

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH

இலவச முதலீடு (5%)- இப்பொழுது 100% வரை அடமானம் பெறலாம். NO FEE - LOWEST MORTGAGE RATE

**மோட்கேஜ் பெறுவது இலகுவாக்கப்பட்டுள்ளது!!!**

FREE DOWN PAYMENT OF 5% FOR THOSE IN NEED
NO FEE - LOWEST RATE - 100% FINANCING

CALL NOW FOR LATEST PROMOTIONS
* 2.25% வட்டி வீதம்



